## தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

## C.C. No. 66 /2025

LW : 8     PW : 7

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணன் | த / பெ. | திரு. மகாதேவன் |
| கிராமம் | : | அரவத்தூர் | தாலுக்கா | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | 77 |

LW : 8     PW : 7

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**24.09.2025.**

நான் அரவத்தூரில் குடியிருந்து வருகிறேன் நான் பாமிணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக இருந்து வந்தேன். சுமார் பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்பு மேற்படி கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கினேன். எவ்வளவு வாங்கினேன் எவ்வளவு திரும்ப செலுத்தினேன் என்பது சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. பணம் செலுத்தியதற்கான செலுத்து ரசீது எதுவும் எனக்கு கொடுக்கவில்லை.

2) என்னிடம் காட்டப்படும் ரூ.74,100/-க்காக வரிசை எண் 87 ல் கடன் கணக்கு பணம் செலுத்தும் சீட்டில் உள்ள செலுத்துபவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) என்னிடம் காட்டப்படும் ரூ.10,000/-க்காக வரிசை எண் 87 ல் கடன் கணக்கு பணம் செலுத்தும் சீட்டில் உள்ள செலுத்துபவர் என்ற இடத்தில் உள்ள

கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அதசாஆ 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) என்னிடம் காட்டப்படும் பிரிவு 81 விசாரணை அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சிபிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

5) பாமிணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் எனது உறுப்பினர் எண் 2155 என்றால் சரிதான். என்னுடைய விவசாய கடன் எண் 1250 என்றால் சரிதான். 21.09.2013 ஆம் தேதி நான் வாங்கிய கடனுக்கு 65 ஆயிரம் அசல் மற்றும் வட்டியாக ரூ.9,100/ ஆக கூடுதல் 74,100/- சங்க செயலாளரிடம் நான் செலுத்தினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

6) நான் மேற்படி சங்கத்தில் கடன் பெற்று திரும்ப செலுத்தினேன் என்றும் என்னை 81 பிரிவு விசாரணை அதிகாரி விசாரித்தார்கள் என்றும் முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

7) அசாஆ 23 மற்றும் அசாஆ 24 ஆன எனது கையொப்பம் உள்ள பணம் செலுத்துசீட்டில் பாமிணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்க முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். அதில் அச்சிடப்பட்ட வரிசை எண் இல்லை என்றால் சரிதான். அதே போல அந்த சீட்டில் காசாளர் உதவியாளர் என்று குறிப்பிட்டுள்ள இடங்களில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி அசாஆ 23 மற்றும் 24 ல் குறிப்பிட்டுள்ள வருடம்

2011 என அடித்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த கையெழுத்துக்கள் எப்போது எந்த இடத்தில் வைத்து போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.24 15:29:50 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.